| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இறுதிஅறிக்கை தாக்கல்** | : | 12.07.2024 | **தீர்வளிக்கப்பட்டது** | : | 07.03.2025 |
| **புலன்கொள்ளப்பட்டது** | : | 12.07.2024 | **விசாரணை காலம்** | : | 1 வருடம் 7 மாதம் 25 நாட்கள் |

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மேட்டூர்

**முன்னிலை:** N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.1,

**2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 07 –ம் தேதி சனிக்கிழமை**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 348/2025**

**CNR No. TNSA18– 002311–2024**

அரசுக்காக சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், மேட்டூர் **குற்ற எண். 160/2024 இ.த.ச. பிரிவு 294(b) of IPC.** **...புகார்தாரர்**

**–எதிர்–**

**குஞ்சப்பன் (57/2026) த/பெ.தேவரெட்டி,** உக்கம்பருத்திக்காடு, கொளத்தூர் மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம். **..எதிரி**

**<u>வழக்கு விசாரணை விவரங்கள்</u>**

( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:– R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021–ன் படி)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில் இருந்த காலம் | : | – |
| ii. | புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 12.07.2024 |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 03.09.2024 |

<table>
<tr><td>v.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட</td><td>:</td><td colspan="3">–</td></tr>
<tr><td rowspan="9">vi.</td><td rowspan="9">சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம்</td><td rowspan="9">:</td><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>23.06.2025</td><td>23.06.2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>23.06.2025</td><td>23.06.2025</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>09.07.2025</td><td>09.07.2025</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>15.07.2025</td><td>15.07.2025</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>12.08.2025</td><td>12.08.2025</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>10.02.2026</td><td>10.02.2026</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>17.02.2026</td><td>17.02.2026</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>24.02.2026</td><td>24.02.2026</td></tr>
<tr><td>vii.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 313–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி</td><td>:</td><td colspan="3">25.02.2026</td></tr>
<tr><td>viii.</td><td>குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்)</td><td>:</td><td colspan="3">13.05.2024–12.07.2024</td></tr>
<tr><td>ix.</td><td>மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள்</td><td>:</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>

இந்த வழக்கில் அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர்

**திரு. T. சுரேஷ்** அவர்களும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.திரு.V.செல்வகுமார்** அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரீசிலணை செய்து இந்த நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

இந்த வழக்கில் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, உக்கம்பருத்திக்காடு, பாப்பான்காட்டில் வசிக்கும் சாந்தா என்பவர் அவரது பட்டா நிலத்தில் உள்ள மாற்று தொழுவத்தில் மாடு கட்டிக் கொண்டிருந்தபோது, இந்த வழக்கின் எதிரி குஞ்சப்பன் தனக்கும், மேற்படி சாந்தா என்பவருக்கும் இடையேயான நிலப்பிரச்சனை காரணமாக ஏற்பட்ட முன் விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு, மேற்படி சாந்தாவை பார்த்து "திருட்டு தேவிடியா கண்டாரோலி இந்த நிலத்தை விட்டு ஓடிப் போய் விடுங்க" என்ற தகாத வார்த்தைகளால் திட்டி சாந்தாவிற்கு மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளார். இந்த சம்பவத்தில் இந்த வழக்கினை குஞ்சப்பன் என்பவர் **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)–ன்** கீழ் தண்டனைக்குரிய குற்ற செயல்கள் செய்துள்ளதாக **கொளத்தூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜா என்பவர்** இந்த நீதிமன்றத்தில் கடந்த **2024 ஆம் வருடம் ஜூலை மாதம் 12ஆம் தேதி** தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட வழக்கு இதுவாகும்.

1. இந்த வழக்கில் கடந்த **12.07.2024–ம்** தேதி, எதிரிக்கு எதிரான குற்றங்கள் புலன்கொள்ளப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின்

பேரில் ஆஜரான எதிரிக்கு **1973–ம் வருடத்திய குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 207–ன் படி (தீர்ப்புரையில் இதற்கு பின் கு.வி.மு.ச. என சுருக்கமாக குறிப்பிடப்படும்)** வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கடந்த **13.08.2024 ம்** தேதி இலவசமாக வழங்கப்பட்டது.

2. அதன் பின்னர் கடந்த **03.09.2024** தேதி இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், **எதிரி இ.த.ச. பிரிவு 294(b) ன் படி** குற்றச்செயல்களை செய்துள்ளார் என்று அனுமானிக்க தகுந்த முகாந்திரங்கள் உள்ளதாக கருதி, கீழ்கண்டவாறு குற்றச்சாட்டுகளின் சாராம்சம் குறித்து படித்துக் காட்டி, விளக்கி கூறி, வினவிய போது, தான் குற்றவாளி அல்ல எனவும், வழக்கை விசாரிக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

3. ஆகவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, இந்த வழக்கில் அரசு தரப்பில் **அ.சா. 1 முதல் அ.சா.8** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

4. **அரசு தரப்பு சாட்சிகள் வாயிலாக அறியப்படும் வழக்கின் விபரம்:**

(a) **பாதிக்கப்பட்ட நபர் சாட்சியம்:** இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபராக குறிப்பிடப்படும் அ.சா.1 சாந்தா என்பவருக்கும், இந்த வழக்கின் எதிரி குஞ்சப்பன் என்பவருக்கும் நிலம் சம்பந்தமான பிரச்சனை இருந்து

வந்துள்ளது. அந்த பிரச்சனை காரணமாக மேட்டூர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு மாலை 5 மணி அளவில் அ.சா.1 சாந்தா தன்னுடைய மாட்டுத்தொழுவத்தில் மாட்டை கட்டிக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த இந்த வழக்கின் எதிரி குஞ்சப்பன் அவரை தேவிடியா கண்டாரோலி என்று அருவருக்கத்தக்க கெட்ட வார்த்தைகளாலும், சொல்ல முடியாத வார்த்தைகளாலும் திட்டி உள்ளார். மேலும் எதிரி குஞ்சப்பன் மாட்டை கட்டினால் உன்னை தீர்த்து விடுவேன் என்று மிரட்டியுள்ளார். சம்பவம் நடந்தபோது மேற்படி அ.சா.1 சாந்தாவின் கணவரான அ.சா.2 சின்னராஜ் உடன் இருந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக கொளத்தூர் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 எழுத்துப்பூர்வமான புகாரை கொடுத்துள்ளார். மேற்படி சம்பவத்தின் போது அ.சா.1 சாந்தாவுக்கு சொந்தமான காட்டில் வேலை செய்து கொண்டிருந்த அ.சா.3 குமார், அவரது மனைவி அ.சா.7 மணிமேகலை, அ.சா.5 ராதாமணி மற்றும் அ.சா.4 அருக்காணி ஆகியோர் இருந்துள்ளனர்.

(b) **முதல் தகவல் அறிக்கை:** மேற்படி அ.சா.1 சாந்தா என்பவர் கடந்த 2024 ஆம் வருடம் மே மாதம் 18ஆம் தேதி கொளத்தூர் காவல் நிலையத்தில் ஆஜராகி அங்கு பணியில் இருந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அ.சா.8 ராஜா என்பவரிடம் கொடுத்த எழுத்துப்பூர்வமான

புகாரினைப் பெற்று, அடிப்படையில் **கொளத்தூர் காவல் நிலைய குற்ற எண். 160/2024** என்ற எண்ணில் **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), மற்றும் 506(i)** ஆகியவற்றின் கீழ் **அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்துள்ளார்.

(c) **சம்பவயிட விசாரணை:** அதன்பின்னிட்டு வழக்கை புலன் விசாரணை எடுத்துக் கொண்ட **சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜா** சம்பவ இடம் சென்று, சாட்சிகளான **இராதாமணி மற்றும் கோபால்** ஆகிய இருவர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ. 3 பார்வை மகஜர்** மற்றும் **அ.சா.ஆ. 5 மாதிரி வரைபடம்** ஆகியவற்றை தயார் செய்துள்ளார். மேலும் சம்பவயிட சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

(d) **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை**: இந்த வழக்கில் நடைபெற்ற புலன் விசாரணை அடிப்படையில், இந்த வழக்கு சம்பவத்தில் எதிரி குற்றமுறு கொலை மிரட்டல் எதுவும் விடுக்கவில்லை என தெரிய வந்ததால், இந்த வழக்கில் இருந்து இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 506(i)–ஐ நீக்கி சட்டப்பிரிவு மாறுதல் செய்து இந்த வழக்கின் புலன் விசாரணை அலுவலர் **அ.சா.ஆ.6 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை** தாக்கல் செய்துள்ளார்.

(e) **இறுதியறிக்கை:** மேலும் இந்த வழக்கின் புலன் விசாரணை

அலுவலர் கடந்த 11.06.2024–ஆம் தேதி தனது புலன் விசாரணை முடித்து கடந்த 12.07.2024–ஆம் தேதி எதிரிக்கு எதிராக **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)**–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

5. மேற்படி அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னர், கடந்த **25.02.2026ம்** தேதி அரசு தரப்பு சாட்சியங்களில், **பாரத நீதிச்சட்டம் பிரிவு 351(1)(b)–ன் படி** எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகளை தொகுத்து, படித்துக்காட்டி விளக்கிக் கூறி கேள்வி கேட்ட பொழுது, அவற்றை பொய்சாட்சி என மறுத்து, அவரது தரப்பில் சாட்சி உள்ளது என தெரிவித்தார். ஆகவே எதிரி தரப்பு சாட்சி விசாரணை 07.03.2026ம் தேதி முடிக்கப்பட்டு இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

6. **இந்த வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய எழுவினா என்னவென்றால் அரசு தரப்பு போதிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் ஆக்க கூறுகளை எந்தவித சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளதா என்பது ஆகும்.**

**சாட்சிய பகுப்பாய்வு மற்றும் முடிவு**

7. இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு, எதிரித்தரப்பில் எந்தவித சாட்சியங்களும், ஆவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை.

8. இந்த வழக்கில் மேற்படி எதிரியின் மீது சுமத்தப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294( b)–ன் கீழான குற்றச்சாட்டுகளின் அடிப்படை ஆக்க கூறுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து இந்த நீதிமன்றம் தற்போது பரிசீலனை செய்ய வேண்டி உள்ளது.

9. அரசு தரப்பு சாட்சிகளின் படி இந்த சம்பவம் ஆனது அ.சா.1 சாந்தாவுக்கு சொந்தமான மாட்டுக் கட்டுத்தரையில் நடைபெற்று உள்ளது. பொதுவாக ஒரு மாட்டுக் கட்டுத்தறையை பொது இடமாக கருத இயலாது என்றாலும், இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக பல சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில், அந்த இடத்தை பொதுமக்கள் வந்து செல்லக்கூடிய இடமாக கருதலாமா என்பது குறித்து இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்ய வேண்டி உள்ளது. அவ்வாறு பரிசீலனை செய்ய வேண்டும் எனில், மேற்படி நேரில் பார்த்ததாக கூறப்படும் நபர்கள் சம்பவ இடத்திலிருந்து சம்பவத்தை நேரில் பார்த்தார்கள் என அரசு தரப்பு சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணம் செய்து உள்ளதா என இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்ய வேண்டி உள்ளது.

(a) இந்த வழக்கில் அ.சா.1 சாந்தா கடந்த மாட்டுத் தொழுவத்தில் மாட்டிக் கட்டிக் கொண்டிருந்தபோது மேற்படி எதிரி தகாத வார்த்தைகளால் திட்டியதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் தனது கணவர் அ.சா.2 சின்னராஜ் என்பவரைத் தவிர வேறு யாரும் சம்பவ இடத்தில் இருந்ததாக முதல்விசாரணையின் போது இந்த

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை என்பதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கின்றது. ஆனால் குறுக்கு விசாரணையின் போது, தங்களது விவசாய நிலத்தில் குமார் மணிமேகலை வேலை செய்து கொண்டிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(b) மேலும் மேற்படி அ.சா.1 சாந்தா அ.சா.2 சின்னராஜ் சம்பவத்தின் போது தங்களது விவசாய நிலத்தில் குமார் மணிமேகலை மற்றும் ஒருவர் வேலை செய்து கொண்டிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(c) மேலும் இந்த சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் இருந்ததாக குறிப்பிடப்படும் அ.சா.3 குமார், அ.சா.4 அருக்காணி, அ.சா.5 ராதாமணி மற்றும் அ.சா.7 மணிமேகலை ஆகியோர் சம்பவத்தின் போது இந்த வழக்கின் எதிரி குஞ்சப்பன் சம்பவ இடத்திற்கு வந்து அ.சா.1 சாந்தவை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டினார் என சாட்சியம் அளித்துள்ளனர்.

(d) மேற்படி நேரில் பார்த்த சாட்சிகளாக குறிப்பிடப்படும் நபர்கள் யாரும் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவத்தை பார்க்க வாய்ப்பில்லை என்பதை எடுத்துக்காட்டு விதமாக குறிப்பிடத்தகுந்த முரண்பாடுகள் எதுவும் இந்த வழக்கில் நிரூபணம் செய்யப்படவில்லை. மாறாக இரு தரப்பினருக்கும் இடையே உள்ள உரிமையியல் பிரச்சனை குறித்தும்

அந்த இடம் யாருடையது என்பது குறித்தும் உள்ள சங்கதிகள் குறுக்கு விசாரணையின் போது வெளிப்பட்டதாக தெரிகிறது. ஆனால் அந்த சங்கதிகள் அரசு தரப்பு வழக்கில் நம்பகத்தன்மையை பாதிக்கும் அளவுக்கு போதுமானதாக இல்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

(e) மேலும் மேற்படி அ.சா.1 சாந்தா என்பவரின் மாட்டுத் தொழுவம் மற்றும் அதனை ஒட்டி உள்ள விவசாய நிலம் அந்த விவசாய நிலத்திற்கும் சாந்தாவின் வீட்டிற்கும் சாதாரணமாக தங்களது வேலைகளுக்காக வந்த மேற்படி நேரில் பார்த்த சாட்சிகள் ஆகியோரின் சாட்சியத்தின் பேரில் நியாயமான சந்தேகத்தை ஏற்படுத்தும் எந்தவித முரண்பாடுகளும் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி மூன்றாம் நபர்கள் வந்து போகக்கூடிய ஒரு இடத்தை ஒரு பொது இடமாக கருதலாம் எனவும், ஒரு மூன்றாம் நபருக்கு காதுக்கு ஏற்றும் வகையில் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டுவது என்பதும் மேற்படி இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)–ன் தண்டனைக்குரிய குற்றச்செயலாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

முடிவு

ஆகவே மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் இந்த வழக்கின் எதிரி

குஞ்சப்பன் என்பவர் சம்பவத்தின் போது அ.சா.1 சாந்தா என்பவரை தகாத வார்த்தைகளால் திட்டி அவருக்கும், அருகில் இருந்தவர்களுக்கும் அருவருப்பு ஏற்படுத்தி தொல்லை கொடுத்து **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)–ன்** கீழ் குற்றச்செயல் செய்துள்ளதாக அரசு தரப்பு போதிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணம் செய்துள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானித்து இந்த வழக்கில் தீர்வு அளிக்கப்பட வேண்டிய எழுவினாவிற்கு அரசு தரப்புக்கு ஆதரவாக விடை அளிக்கிறது.

முடிவாக, இந்த வழக்கின் **எதிரி குஞ்சப்பன்** என்பவர் **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)–ன் கீழ்** குற்றவாளி என முடிவு செய்து அவருக்கு வழங்கப்படும் தண்டனை குறித்து இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும் போது அவருக்கு தற்போது சுமார் 57 என்பதை கருத்தில் கொண்டும், அவருக்கு முன் குற்ற வழக்குகள் எதுவும் இருந்து தண்டனை பெற்றதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்படாத கருத்தில் கொண்டும், இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு இரண்டு மாதம் அல்லது அபராதம் மட்டுமே விதிக்கக்கூடிய குற்றம் என்பதை கருத்தில் கொண்டும், வழக்கு சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், எதிரி குஞ்சப்பன் என்பவருக்கு தண்டனை வழங்குவதற்கு பதிலாக அவர் திருந்தி வாழ்வதற்கு ஒரு வாய்ப்பாக **குற்றவாளிகளுக்கான நன்னடத்தை கண்காணிப்பு சட்டம் பிரிவு 3–ன்** கீழ் மன்னித்து இந்த நீதிமன்றம் விடுதலை செய்கிறது.

இந்த வழக்கில் சான்று பொருள்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் இந்த வழக்கில் எதிரிக்கு பிணையாளர்கள் வழங்கிய பிணைப் பத்திரத்தை ரத்து செய்து என்னை நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் எனது சுருக்கெழுத்திற்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்து, சரிபார்க்கப்பட்டு, இன்று **2026ம் வருடம் மார்ச் மாதம் 07–ம் தேதி** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டு, எனது கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.03.09 10:36:08 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ. சா. 1 | சாந்தா |
| அ. சா. 2 | சின்னராஜ் |
| அ. சா. 3 | குமார் |
| அ. சா. 4 | அருக்காணி |
| அ. சா. 5 | ராதாமணி |
| அ. சா. 6 | கோபாலகிருஷ்ணன் |
| அ. சா. 7 | மணிமேகலை |
| அ. சா. 8 | திரு.ராஜா, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

அ. சா. ஆ.1 புகார்

அ. சா. ஆ.2 பார்வை மகசரிலுள்ள அ.சா.5 ராதாமணியின் முதலாவத கையெழுத்து

அ. சா. ஆ.3 பார்வை மகஜர்

அ. சா. ஆ.4 முதல் தகவல் அறிக்கை

அ. சா. ஆ.5 மாதிரி வரைபடம்

அ. சா. ஆ.6 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்று பொருள் :– இல்லை</u>**

**எதிரி தரப்பு சாட்சிகள்:–**இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.03.09 10:36:22 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1 ,மேட்டூர்.**

**குறிப்பு**

1) தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

**நகல்:–**

1) மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.